★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

சர்க்கரை தந்த சாவு!

அலகாபாத், ஜூலை 17—

பந்தயம் ரூ. 25! ஆறு பவுண்டு சர்க்கரை சாப்பிட வேண்டும்!—அவ்வளவுதான்; இந்தப் பந்தயத்தை ஏற்பாடு செய்தவர் ஒரு பனியா!

பாவம்! ஒரு இளைஞன் 25 ரூபாய்க்கு ஆசைப்பட்டு ஆறு பவுண்டு சர்க்கரையையும் சாப்பிட்டான்; விளைவு? மயக்கம் வந்தது—மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான்—பிரதாப்கரில் உள்ள அந்த மருத்துவ மனையில், அவன் மீளாத மயக்கத்தில் ஆழ்ந்து விட்டான்!

மலர் 4] சென்னை: ஆடி 3உ புதன் (18—7—56) ★ ☆ வெளியூர்: ஆடி 4உ வியாழன் (19—7—56) [இதழ் 29

எதிர்ப்பை பலவீனப்படுத்த ஆட்சியாளர் சதி?

பிரதம தேர்தல் அதிகாரியின் எதேச்சாதிகாரம்

புதிய கட்சிகளுக்கு சின்னம் வழங்க முடியாதாம்!

மூன்று சதவிகித வாக்குகள் பெற்ற பின்னரே ஒப்புதலாம்

நாகபுரி, ஜூலை 17—

இந்தியாவின் பிரதம தேர்தல் அதிகாரி, சர்வாதிகாரமான முடிவுகளை மேற்கொண்டு வருகிறார் எனத் தெரியவருகிறது.

தம் விருப்பம்போல், தேர்தல் நடைமுறைபற்றி கருத்துக்களை அறிவித்து வருகிறார் என்பதற்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

புதிய கட்சிகள் தேர்தலில் ஈடுபடும்போது அவற்றிற்குச் சின்னங்கள் ஒதுக்கித் தருவதில், சுகுமார் சென் என்ற அந்த அதிகாரி எதேச்சாதிகாரமானதோரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

"புதிய கட்சிகள் தேர்தலில் ஈடுபட்டு, தேர்தல் முடிந்த பின்னர், மொத்தம் பதிவான வாக்குகளில் மூன்று சதவிகிதம் பெற்றிருக்கின்றனர் என்று காணப்பட்டால் மட்டுமே, தேசிய அடிப்படையிலோ, மாநில அடிப்படையிலோ அங்கீகாரம் பெற முடியும்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

"டாக்டர் லோகியாவின் சோஷலிஸ்டு கட்சி, சம்யுக்த மராட்டிய சமிதி போன்ற புதிய அரசியல் கட்சிகளுக்கு பொதுத் தேர்தலின்போது சின்னங்கள் வழங்கப்பட மாட்டாது. ஏனெனில், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வாக்குகளின் எண்ணிக்கை இப்போது தெரியாது," என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

"எந்த ஒரு க[illegible], புதிய தேர்தல் [illegible] கோருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது," என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கட்சிகளின் சார்பில் எவரேனும் தேர்தலில் நிற்க விரும்பினால், அவர்கள், எவருக்கும் ஒதுக்கப்படாதிருக்கிற நாற்காலி, சைக்கிள் போன்ற சின்னங்களை வைத்துக்கொள்ளலாம் என்றும், அபேட்சை பத்திரத்தை வாபஸ் வாங்குவதற்குரிய கடைசி நாளுக்கு முன்பாகவே தேர்தல் கமிஷனுக்கு அதைத் தெரிவிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தாராம்.

வருந்துகிறோம்

கடந்த 20-6-56 'நம் நாடு' இதழில் (வெளியூர் 21-6-56) 'முதலமைச்சரிடம் மனுகொடுக்கச் சென்றவரிடம் போலீஸ் முரட்டுத்தனம்' என்ற தலைப்பின்கீழ் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளபடி, 'கோவை மாவட்ட நாட்டாண்மைக் கழக உறுப்பினர் வி. எஸ். எம். நஞ்சப்பா அவர்கள், தான் சம்பவத்தின் போது, போலீசாருக்கு உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை என்றும் அந்தச் செய்தி தவறானது என்றும் மறுப்பு அனுப்பியிருக்கிறார்.

அதுபோன்ற ஒரு தவறு நிகழ்ந்து விட்டமைக்காக வருந்துகிறோம்

—ஆசிரியர்.

'மைசூரின் எதிர்காலம் மேலிடத்தைப் பொறுத்தது'

'முடிவை மகிழ்வோடு ஏற்பேன்' என்கிறார் அனுமந்தை[illegible]

"மைசூரின் எதிர்கால அரசியலும், காங்கிரசின் எதிர்காலமும் மேலிடத்தின் கையிலிரு[illegible]றன; எல்லாவற்றையு[illegible] தீர்ப்பிற்கே [illegible]ட்டேன்; அவர்[illegible]வு எதுவாயிரு[illegible]மை நான் அதை மகிழ்வோடு ஏற்றுக் கொள்வேன்"

என்று, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

முடிவு காண்பது குறித்து தேபர்

பரோடா, ஜூலை 16—

'மைசூர் மாநில சட்டசபைக் காங்கிர[illegible]ல் தோன்றியுள்ள [illegible]சண்டைக்கு, காங்கிரஸ் [illegible]திய பார்லிமெண்டரி போர்டு கூட்டத்தில்தான் முடிவு காண முடியும்' என்று, தேபர் இங்கு கூறியிருக்கிறார்.

'பார்லிமெண்டரி போர்டு முடிவு எடுத்ததும் அதிகாரபூர்வமான அறிவிப்பு வெளியாகும்' என்றும் கூறிய அவர், இதனை மேலும் விளக்க மறுத்துவிட்டாராம்.

'தாய் நாடு திரும்பும் இலங்கை தமிழர்களுக்கு வாழ்வளிக்க'

'தென்னாட்டில் தொழில்களை நிர்மாணிக்க வேண்டும்'

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களின் முறையீடு

சென்னை, ஜூலை 17—

"சீரான அரசியல் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமேயல்லாது, பொருளாதார நோக்கிலிருந்தும், தொழில் துறையில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பது பேராபத்தான பிரச்சினையாகும்.

"ஐதராபாத் பிளக்கப்படாமல் இருந்திருக்குமானால், தட்சிணப் பிரதேச அமைப்பு குறித்து, அதன் ஆதரவாளர்கள் சிந்தித்திருக்கலாம்; இப்பொழுது அதுபற்றி விவாதித்துக் கொண்டிருப்பது வெறும் வரட்டுத்தனமாகும். எனவே, மொழி வழி அமைப்பை நாம் உடன்பாடாக்கிக் கொள்ளவேண்டும்."

இவ்வாறு, மக்கள் சபை உறுப்பினரான டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆங்கில சங்கத்தை டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். கல்லூரித் தலைவர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டாக்டர் அவர்களை வரவேற்று, மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தமது துவக்க உரையில் குறிப்பிட்டதாவது:—

"தொழில் துறையில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டுள்ள கேட்டினை திட்டக் குழு பரிகரிக்கத் தவறிவிட்டது வருந்தத் தக்கதாகும். குறிப்பிட்ட இடங்களில் [illegible]த் தொழில்களை நிர்மாணிப்பதில் திட்டக் குழு மேற்கொண்ட போக்கு, சில நூல் கட்டாயத் தேவையை ஒரு பொருட்டாகக் கொண்டு உருவாக்கப்பட்டதல்ல.

"எங்கு மூலப் பொருட்கள் கிடைக்கின்றனவோ அங்குதான் அதற்கான தொழில்களைத் துவக்கவேண்டும் என்ற வாதம், நியாயமான வாதமாகாது. அந்தத் தொன்று தொட்ட வழக்கத்தைக் கைவிட்டு, புதுப் புது தொழிலிடங்களை நிர்மாணிக்கவேண்டும்.

'இலங்கையிலிருந்து ஏராளமான தமிழர்கள் அண்மையில் தங்கள் தாய் நாடு திரும்புவது எதிர்பார்க்கப்படுவதால், அவர்கள் அனைவரும் பணி பெறுவதற்கான வாய்ப்பளிக்கவாவது, தென்னாடு தொழில் மயமாக ஆக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

"இயந்திர நெசவுத் தொழில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தக் கூடிய அம்பர் சர்க்காவை மேற்கொள்ளும் பழைய உலகக் கருத்தை பின்பற்றி வருவது வருந்தக்கூடியதாகும்.

"அரசியலில் சர்வாதிகாரத்தைப் பின்பற்றுது, சமதர்ம அமைப்பை உருவாக்க வேண்டுமானால், குறிப்பிட்ட தொழில்களில் தனியார் பங்கு கொள்வதற்குத் தடை எதுவும் இருத்தல் கூடாது.

"ஆட்சி மொழியாக இந்தி மொழி கொள்ளப்பட வேண்டுமானால், அதை செயல்படுத்தும் கால வரையறையை முடிவு கட்டும் உரிமை, இந்தி வழங்கப்படாத பகுதியில் வாழும் மக்களுக்கே இருக்கவேண்டும்."

ம. பி. மாநில ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

4,000 பேர் பயன் பெறுவர்

நாகபுரி, ஜூலை 16—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளி ஆசிரியர்களுக்கெல்லாம், சர்க்கார் விகிதப்படி சம்பளம் தரப்படவேண்டும் என்றும், இந்தப் புதிய விகிதச் சம்பளம் கடந்த ஏப்ரல் திங்களிலிருந்தே கொடுக்கப்படவேண்டும் என்றும், ம. பி. மாநில சர்க்கார், பள்ளி நிர்வாகிகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இதனால் சுமார் 4,000 ஆசிரியர்கள் சம்பள உயர்வு பெறுவர்.

இந்த புதிய சம்பள விகிதம் தருவதினால் நிர்வாகிகளுக்கு ஏற்படக்கூடிய உபரிச் செலவை, நிர்வாகிகளுக்குத் தரும் மானியத்தின் மூலம் சர்க்கார் சரிக்கட்டித் தருவர் என்றும் கூறப்படுகிறது.

பட்டம் பெற்ற ஒரு ஆசிரியருக்குக் கிடைக்கும் குறைந்தபட்ச சம்பளம், சர்க்கார் விகிதப்படி ரூ. 100 முதல் 200 வரை உள்ளதாம்.

சைக்கிள் வரி ரத்தாகிறது!

நகரசபை முடிவுக்கு சர்க்கார் அங்கீகாரம்

சென்னை, ஜூலை 17—

சென்னையில் சைக்கிள் வரி கடந்த ஏப்ரல் திங்கள் முதல் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

நகரசபை, இந்த வரியை ஒழிப்பதெனச் செய்திருந்த முடிவிற்கு சர்க்கார் தனது ஒப்புதலைத் தந்துவிட்டது என்று தெரியவருகிறது. இந்த வரி ஒழிப்பினால், சென்னை நகரசபைக்கு ஆண்டுதோறும் ரூ. 2 இலட்சம் நஷ்டம் என்றும் கூறப்படுகிறது.

சைக்கிள் ஒன்றுக்கு, ஆறுமாதத்திற்கு இரண்டு ரூபாய் வீதம் விதிக்கப்பட்டுவந்த இந்த வரி ரத்து செய்யப்படுவதினால் ஏற்படும் நஷ்டத்தை நகரசபை தாங்கிக்கொள்ள முடியும் என்றே கருதப்பட்டு, வரி ரத்தாகியிருக்கிறது.

மலபார் ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்

வகுப்புகள் நடத்துவதற்கு மறுப்பு

சம்பள, கிராக்கிப்படி பாக்கி பெற நடவடிக்கை

கோழிக்கோடு, ஜூலை 17—

நிர்வாகிகள் தங்கள் குறைகளை நிவர்த்திக்க மறுத்துவிட்டனர் என்பதால்; இங்குள்ள கணபதி உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்கள், வகுப்பு நடத்த மறுத்து விட்டனர் என்று தெரியவருகிறது.

பள்ளியின் ஆசிரியர் சங்கம் கடந்த வாரம் மேற்கொண்ட முடிவை ஒட்டியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கடந்த ஜூலை 18 முதல், பள்ளியின் கல்லை கிளை ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. அதைத் தொடர்ந்து நிர்வாகிகளும் ஜூலை 23-ந் தேதி வரை பள்ளிக்கூடத்தை மூடிவிட்டனராம்.

தங்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக வரவேண்டிய சம்பளம், மற்றும் கிராக்கிப்படி பாக்கியை உடனடியாகத் தருவதுடன், வேலை நிலைகள் முன்னேறுவதற்கும் வழி வேண்டுமென ஆசிரியர்கள் கோருகின்றனராம்.

நம் நாடு

சென்னை 18—7—'56 புதன்

சனநாயகத் துவக்கம்

விடுதலை வரலாற்றைக் கைமுதலாகக் கொண்டு காங்கிரஸ் கட்சி இன்றும் ஒரு அரசியல் கட்சியாக செயல்பட்டு வருகிறது. அதற்கு இணையான ஒரு அரசியல் கட்சி இந்தியத் துணைக்கண்டத்தில் இன்னமும் உருவாகவில்லை. இந்த உண்மை நிலைமையில், ஒருவர் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆளும் கட்சிக்கு எதிராக ஒரு பலம் பொருந்திய கட்சி செயல்பட வேண்டியது, மக்களாட்சி முறையின் கட்டாயத் தேவையாகும். அந்தத் தேவையை முழு விருப்புடன் நிறைவேற்றித் தரவேண்டிய பொறுப்பு, மற்றத் தனிநபர்களுக்கு இருப்பது போன்றே காங்கிரஸ் கட்சிக்கும் இருந்து வருகிறது.

மக்களாட்சி முறையில் தனக்கும் அசைக்க முடியாத உறுதிப்பாடு இருப்பதாக, காங்கிரஸ் கட்சி மேலிடத் தலைவர்கள் அடிக்கடி பறையறைவித்து வருகின்றனர். அவ்வாறு தாங்கள் கூறிவரும் சொல்லை மெய்ப்பிக்கும் வகையில், அந்தத் தலைவர்களின் செயல் இருப்பது கிடையாது. சொல்லி வருவதற்கு முழுதும் முரண்படக் கூடிய வகையில், தானாக உருவாகும் எதிர்க்கட்சியையும்கூட முளையிலேயே கருக்கிவிடக் கூடிய தன்மையில், அத்தலைவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

காங்கிரஸ் போன்ற உருவ அமைப்பில், அக்கட்சிக்கு எதிராக அதுபோன்ற ஒரு கட்சியை அனைத்திந்திய நிலையில் உருவாக்கி வளர்ப்பது என்பது ஒன்றிரண்டாண்டுக் காலத்துக்குள்ளாக நிறைவேறிவிடக் கூடியதன்று. இந்தியத் துணைக்கண்டத்து மக்களுள் பெரும்பான்மையினரிடம் காணப்பெறும் அரசியல் மன வளம் அதற்கான நம்பிக்கையை ஒருவருக்கு ஊட்டுவதாக இல்லை.

இவ்வாறு நாம் கூறுவதில் மிகைப்படக் கூறியது எதுவுமில்லை. சென்ற ஐந்தாண்டுக் காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றிய அரசியல் கட்சிகளிடை ஏற்பட்டுள்ள பெரும் குழப்பங்களும், கட்சி உள்ளடிப் போராட்டங்களும், அத்தகைய முடிவை மட்டுமே நாம் கொள்ளுவதற்கு பெரிதும் துணை புரிகின்றன.

இதுவரை தோன்றிய அனைத்திந்திய அரசியல் கட்சிகளுக்குள்ளாக ஏற்பட்ட கட்சி உள்ளடிப் போராட்டங்களின் பலனாக, தாமாகவே அக்கட்சிகள் அழிவை அல்லது சரிவைத் தேடிக் கொண்டது ஒரு பக்கம் இருக்க, அந்த நிலையை அடைவதற்கு காங்கிரஸ் கட்சி எடுத்துக் கொண்ட முயற்சியும் சாதாரணமானதல்ல. ஆசையூட்டியும், அன்புரை பகன்றும் எதிர்க்கட்சிகளைச் சிதைத்தொழிப்பது என்பது எந்த ஒரு ஆளும் கட்சிக்கும் மிகமிக இலகுவில் முடியக் கூடியதாகும். அதேமுறையில், ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியும், தனது அரசியல் பிடியை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்காக, எதிர்க்கட்சிகளைப் பதவியைக் காட்டி அழைத்து, அக்கட்சிகளை அணைத்துக் கொன்றுவிட்டது.

மக்களாட்சி முறையில் இன்றியமையாத் தேவையாக இருக்கின்ற எதிர்க் கட்சியை உருவாக்குவதற்குக் காங்கிரஸ் உதவத் தவறியதைக் கூட வேண்டுமானால் மறந்துவிடலாம். ஆனால் தாமாக உருவானக் கட்சிகளை நயத்தாலும் பயத்தாலும் ஒழித்துக் கட்டிய காங்கிரஸ் கட்சியின் ஜனநாயக விரோதப் போக்கை, நம்போன்றவர்களால் என்றைக்கும் மறந்துவிட முடியாது.

அனைத்திந்திய நிலையில் காங்கிரசிற்கு எதிரான கட்சி அல்லது கட்சிகளை உருவாக்குவதற்குரிய மக்களின் மனப்போக்கு, தலைமை, பிரச்சாரசாதனம், சீரிய முயற்சி ஆக எதுவும் இந்தியத் துணைக் கண்டத்தில் இன்று இடம் பெற்றிருக்கவில்லை. இயல்பானக் குறைபாடுடன், காங்கிரசுக் கட்சியில் அதிகார வெறியும் எதிர்க் கட்சிகள் உருவாவதைக் கெடுத்தொழிப்பதாக இருக்கிறது.

மாறுபட்ட அடிப்படை இலட்சியத்தின் மீது எதிர்க் கட்சிகள் உருவாவதுதான் மக்களாட்சி முறையின் மாண்பாகும். அத்தகு சிறந்த இலட்சிய அடிப்படையில் எதிர்க் கட்சிகள் எதுவும் தோன்றக் கூடாதத் தன்மையால், ஆளும் கட்சியான காங்கிரஸ் தனது அடிப்படைகோட்பாட்டிற்குக் கவர்ச்சிகரமான பெயரைத் தானாக சூட்டிக் கொண்டு—இல்லை—களவாணிக் கொண்டதின் மூலம், வேறு எதிர்க்கட்சிகள் எழுவதற்கு [illegible] ஒரு வாய்ப்பை [illegible] குலைத்துவிட்டது. எனவே, குறிப்பிட்ட ஒரு இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சிகள் உருவாகி வளர்ச்சி பெறுவதற்கு மார்க்கமே இல்லாது போய்விட்டது.

பொதுவாக மாகாண நிலையில், காங்கிரசுக்கு எதிராக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் உருவாவதற்குரிய வாய்ப்புகள் இப்பொழுதும் இருக்கத்தான் இருக்கின்றன. மற்ற மாகாணங்களில் இந்த வாய்ப்பு இருந்தாலும் இல்லாமற் போனாலும் இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுதும் அந்த வாய்ப்பு தூர்ந்துபோய் விடவில்லை. ஆனால், இருக்கும் அந்த வாய்ப்பையும் இல்லாது ஒழிக்கக் காங்கிரஸ் பெருமுயற்சி செய்து வருகிறது.

சிறந்ததோர் இலட்சிய அடிப்படையில் இல்லையானாலும், ஏதோ ஒரு அடிப்படையில் இம்மாகாணத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக, சென்ற பொதுத் தேர்தலின்போது எதிர்க்கட்சிகள் தோன்றலாயின. அவைகளுக்கு நிலையான அமைப்பு கிடையாது என்பது உண்மையேயானாலும், பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை மண்ணைக [illegible] செய்து, அக்கட்சிகளுக்கு [illegible] கள் வெற்றியைத் தேடித் தந்துள்ளனர் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, அந்தக் கட்சிகள் பெற்ற வெற்றி, உயர்ந்ததோர் எதிர்க் கட்சி அமைப்புக்கான துவக்கமாகும். அந்தத் துவக்கத்தை, தனது கட்சியின் அதிகார வெறிக்கு ஆக்கம் தேடிக்கொள்வதற்குப் பயன்படுத்தாது காங்கிரஸ் இருந்திருக்குமானால், அத்துவக்கத்தை ஒரு முதலாகக் கொண்டு பலம்பொருந்திய ஒரு எதிர்க்கட்சி இங்கு செயல்பட்டு இருப்பது எதிர்பார்க்கக் கூடியதாக இருந்திருக்க முடியும்.

காங்கிரஸ் கட்சி கையாண்ட அரசியல் கூடா ஒழுக்கத்தின் விளைவாக, இங்கு எதிர்க்கட்சி இயங்குவது என்பது மீண்டும் ஒரு புத்தம் புதிய முயற்சியாகிவிட்டது. அப்புனிதமான பெருமுயற்சியில் நமது முன்னேற்றக் கழகம் இப்பொழுது ஈடுபட முன்வந்து இருக்கிறது. இதைத்தான் சனநாயகத் துவக்கம் எனக் கொள்ளவேண்டும்.

ஆச்சாரியார் பாதையில் காமராசர்!

விற்பனை வரி மாற்ற விவகாரத்தில் வழக்கமான மவுனம்!

வியாபாரிகள் வேதனைக்குரல் வியர்த்தமாயிற்று!

ஒருகட்ட விற்பனைவரி வியாபாரிகள் பெருங்கூட்டத்தில் வி. வி. இராமசாமி முழக்கம்

"வரும் பொதுத்தேர்தலில், பலகட்ட விற்பனை வரியை எதிர்க்கும் அரசியல் கட்சியாளரை மட்டுமே ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்துள்ளோம். அரசியல் கட்சிக்காரர்கள் எவரும் அம்முயற்சிக்கு முன்வராவிடில், வர்த்தகர் சார்பிலே சில அபேட்சகர்களை நிறுத்தி, அதிலும் இதே திட்டத்தையே தேர்தல் திட்டமாக்கிப் போட்டியிடுவது என்ற எண்ணம் கூட எங்கட்கு வந்துள்ளது."

இவ்வாறு, 15—7—56 மாலை 6-மணியளவில், தமிழ் நாடு வர்த்தகர் கழகச் சார்பில், திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பலகட்ட விற்பனைவரி எதிர்ப்பு மாநாட்டுப் பிரச்சாரக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், திரு. வி. வி. இராமசாமி எம்.எல்.சி. அவர்கள் குறிப்பிட்டார்.

கூட்டத்தில், திருவாளர்கள் கே. கிருஷ்ணமூர்த்தி, கேசவலால் காளிதாஸ்சேட், எம் இராசா, எம். ஏ. தங்கப்பன் ஆகியோர் பேசினர்.

திரு. வி. வி. இராமசாமி அவர்கள் மேலும் தொடர்ந்து பேசியதாவது:—

"ஆச்சாரியார் முதன் முறை ஆட்சிக்கு வந்தபோது, விற்பனை வரி கொண்டுவரப்பட்டது. அப்பொழுது, சென்னை மாநிலம் முழுமையும் பல கட்டங்களிலிருந்தும், பலதரப்பட்ட மக்களிடமிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன; வர்த்தகர்களும் பெரும் அளவுக்கு எதிர்ப்புக் காட்டினார்கள்; அப்பொழுதெல்லாம் முதலமைச்சர் ஆச்சாரியார், வியாபாரிகளைச் சமாதானம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்—'வியாபாரிகளுக்கு இதனால் எவ்வித நட்டமுமில்லை; பொதுமக்களிடமிருந்து மட்டுமே பெறவேண்டியதுதான்; அவர்களிடம் வாங்கி எங்களிடம் தருவதில் உங்களுக்கு நட்டமென்ன? என்று கேட்டார்; விற்பனை வரி விதிக்கப்பட்டிருப்பதின் காரணமாக, வியாபாரம் பாதிக்கப்படும்—தனிக் கணக்காளர்கள் தேவைப்படும்—தொல்லைகள் அதிகம் என்பதை எடுத்துக்காட்டினோம். எனினும், ஆட்சியாளர்கள் வரியை ரத்துசெய்ய மறுத்துவிட்டனர்; அதன் பின்னர், தூதுக் குழுக்கள் பல சென்றன; வரி கொடுக்க முடியாமைக்காக அவ்வாறு சொல்கிறார்கள் என்றும், மதுவிலக்கினால் பாதிக்கப்படும் வருமானத்தை ஈடுசெய்வதற்[illegible] வரி விதிக்கிறோம் என்று [illegible] [illegible]ப்பில் குறிப்பிடப்பட்டது; [illegible] என்னு[illegible] நல்ல காரியத்திற்[illegible] படும் இந்த வரி விஷயத்தில் குறுக்கிடாதீர்கள்' என்றும் சொன்னார்கள். பின்னர், மதுவிலக்கு எதிர்ப்பாளர்களுக்கு நாங்கள் மறைமுகமாக—வரியை எதிர்ப்பதின்மூலம்—ஆதரவு தருவதாகவும், நாங்கள் அவர்களின் நட்பினரோ என்று சந்தேகப்படுவதாகவும் குறிப்பிட்டார்கள்.

"பிறகு, 'நாடு விடுதலை அடையும்போது வரி ரத்து செய்யப்படும்' என்று எதிர்பார்த்தோம்; எதுவும் நடைபெறவில்லை.

"1951-ம் ஆண்டு தேர்தல் வந்தது; பிரச்சினையைப் பல இடங்களிலும் பலரும் வற்புறுத்தினார்கள். ஆச்சாரியார் ஆட்சிக்கு வந்தார்; வரி விதிக்கப்படுவதால் ஏற்படும் தொல்லைகளைத் தவிர்க்க விற்பனை வரி ஆலோசனைக் கமிட்டி நியமிக்க வேண்டுமென்றும், அந்தக் கமிட்டி பொதுமக்களையும், வர்த்தகர்களையும் கண்டு கருத்தறிந்து சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது; ஆச்சாரியார் அவ்விதம் செய்வதாக வாக்களித்தார்.

"பிறகு ஆந்திரப் பிரிவினை நிகழ்ந்தது. பிரிவினை காரணமாக உள்ள அலுவல்களால், பிரச்சினை நழுவியது. திரும்பவும் சர்க்கார் அது பற்றிக் கவனிக்கும் என்று எதிர்பார்த்தோம்; எதிர்பார்த்தது வீணாயிற்று. எனவே, முதன் முதலில் 1953 டிசம்பரில் ஈரோட்டில் பலகட்ட விற்பனை வரி எதிர்ப்பு முதலாவது மாநாடு கூட்டி, பல தீர்மானங்கள் நிறைவேற்றி ஆட்சியாளருக்கு அனுப்பிவைத்தோம்; எல்லா மாவட்டங்களிலும் அது பற்றிப் பிரச்சாரம் செய்தோம்; சர்க்கார் எங்கள் பக்கம் கவனம் செலுத்தவேயில்லை.

"1955 மார்ச்சில், குடந்தையில், இரண்டாவது மாநில மாநாடு பலகட்ட விற்பனை வரி எதிர்ப்புக்காக நடைபெற்றது. அதுவும் ஆட்சியாளரின் கவனத்தைக் கவரவில்லை.

"'வர்த்தகர்களாகிய நாங்கள் வரி தருகிறோம்; சர்க்காரின் வருமானம் குறையாத முறையில் பார்த்துக்கொள்கிறோம்; விசாரணைக் குழு அமையுங்கள்; எங்களை அழைத்து சமரசம் செய்யுங்கள்' என்றெல்லாம் வற்புறுத்தினோம்.

"பிறகு சட்ட திருத்தம் வந்தது. அந்தச் சட்ட திருத்தம்—திருடனை எந்த நேரத்திலும் எங்கும் கைது செய்வதுபோல, 'வியாபாரியை எங்கும், எப்பொழுதும் சோதிக்கலாம்—வரிக் கணக்கிற்காக' என்று கூறியது. இதனால், வியாபாரிகள் பலர் ஒழுக்கம் கெட்டவர்களாக ஆகச் சட்டம் வழி செய்தது. வியாபாரிகளின் ஒழுக்கம் குறையக் குறைய அதிகாரிகளின் ஒழுக்கம் குறைந்து, நாட்டின் ஒழுக்கமே குறைவதற்குச் சட்டம் வழி செய்யும் வகையில் அமைந்திருந்தது.

"1956 பிப்ரவரியில், விசேட மாநாடு ஒன்றுகூட்டி தூதுக் குழு ஒன்றை அனுப்பிவைத்தோம். காமராசரைப் பேட்டி கண்டோம். சட்ட திருத்தம் மாற்றப்படுவதாகக் குறிப்பிட்டார்கள்; ஆனால் இதுவரையில் முன்னேற்றம் இல்லை; ஆலோசனைக் குழுகூட இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

"ஆனால் நேற்று உருவாகியுள்ள ஆந்திர அரசில்—விற்பனை வரியை 'காமதேனு' என வர்ணித்த கோபால் ரெட்டியை முதலமைச்சராகக் கொண்டிருக்கிற ஆந்திரத்தில்—விசாரணைக் குழு அமைக்கப்படவிருப்பதாக இப்பொழுது செய்தி வந்துள்ளது. ஆனால், [illegible] மாநில அமைச்சர்களோ, [illegible] விஷபக்ஷையும் போல இதிலும் [illegible] முடிவுக்கு வராமலிருக்கிறார்கள்.

"எந்த நல்ல திட்டங்களையும் கொண்டு வர ஆண்டுகள் பலவற்றைக் கடத்துவதிலும், 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று சொல்வதிலும் மட்டுமே நம்முடைய ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

"இந்த நிலை வளர்ந்துகொண்டே போனால் வியாபாரிகள் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். சென்னையில் இதுவரை 16 வட்டங்களில் கூட்டங்கள் போட்டுவிட்டுக் கடைசியாக இப்பொழுது இங்கு கூட்டம் போட்டுள்ளோம்.

"இனி, ஆகஸ்டில், மாநில மாநாடு சென்னையில் கூட்டவிருக்கிறோம். அதில் எல்லாப் பிரச்சினைகட்கும் முடிவுக்கு வரமுடியும் என்று நம்புகிறோம். அந்த மாநாட்டில்தான் நாங்களே தேர்தலுக்கு நிற்பது பற்றியும் முடிவுக்கு வரவிருக்கிறோம். இந்த எங்களின் முயற்சிகளுக்கெல்லாம் பொதுமக்கள் எல்லா ஒத்துழைப்புகளையும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

'தமிழுக்கு சமநிலை வழங்க வேண்டும்'

இலங்கை கல்விக் குழு சிபாரிசு

"தேசிய மொழிகளாகிய சிங்களமும் தமிழும், ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து ஆட்சி மொழிகளாக்கப்படுமென உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்,"

என்று, இலங்கை உயர் கல்விக் குழு, தனது இறுதி அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளது.

இரண்டு மொழிகளையும் பாட மொழிகளாக்குவதற்கான வழிவகைகளைச் சிபாரிசு செய்வதற்காக 1953-ம் ஆண்டு அக்டோபரில், இந்தக் குழு நியமிக்கப்பட்டது; 1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தரப்பட்ட இடைக்கால அறிக்கையில், 'ஒரே ஒரு மொழியே தேசிய மொழியாக்கப்பட வேண்டும்' என்று, அக்குழுவின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்; ஆனால், இந்தச் 'சிபாரிசு வரம்பு மீறியதாகும்' என்று அப்போதைய முதலமைச்சர் கொத்தலாவல குழுவிற்குத் தெரியப்படுத்தியிருந்தார்; இதனையடுத்து, குழுவினர், இரு மொழிகளையும் அரசாங்க மொழிகளாக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றனர்.

பொதுத் தேர்தலுக்கு முன் (1956 பிப்ரவரி) குழுவின் இறுதி [illegible]க்கை தரப்பட்டிருந்தும் இம்மாதம் [illegible] இரவுதான் அது வெளிய[illegible]கிறது

விபரீத நிலைமை!

இலங்கைவாழ் தமிழ் மக்களைத் திருப்பியனுப்பும் இலங்கை சர்க்கார் கொள்கையின் விளைவாக, சென்ற ஆண்டில் ரூ 3,70,00,000-த்திற்கும் அதிகமான பணம் வெளியேறியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

'பலகட்ட விற்பனை வரியை எதிர்த்து கிளர்ச்சி செய்க'

தமிழ் நாடு சாக்குத் தொழிலாளர் சம்மேளன வேண்டுகோள்

திருப்பூர், ஜூலை 16—'பலகட்ட விற்பனை வரியை எதிர்த்துத் தமிழ் நாடு முழுமையிலுமுள்ள சாக்கு வர்த்தகர்களும், சாக்குத் தொழிலாளர்களும் தொடர்ந்து கிளர்ச்சி செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று இங்குள்ள திரு. வி. க. நாடக மன்றத்தில் நடைபெற்ற த. நா. சாக்குத் தொழிலாளர் சம்மேளனத்தின் மத்தியக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேற்படி கூட்டம் ஜூலை 15, 16 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்றது. பல தலைவர்களும், சாக்குத் தொழிலாளர்களும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், திருப்பூர் தனலட்சுமி ஆலைத் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தும், உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், தூத்துக்குடி சாக்கு வர்த்தகர்கள் 8 மணிநேர வேலையைத் தொடர்ந்து அமுல் நடத்தக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஒ. கி.)

தோழர்கள் சங்கரன், அந்தோணிசாமி, விவேகானந்தன், நாகராசன், பால்துரைராசு, சங்கரநாராயணன் ஆகியோர் பேசினர். வாக்கெடுப்பில் தீர்மானம் வெற்றி பெற்றது. பின்னர், திரு வரதநஞ்சையா அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இலக்கியச் சொற்போர் கூட்டம்

15—7—56 காலை 10 மணியளவில், சென்னை இராயபுரம் பனைமரத் தொட்டி சிவசுப்ரமணிய சுவாமி கோவிலில் இலக்கிய மன்றச் சார்பில் திரு அ. முனுசுவாமி தலைமையில், 'கல்லூரிப் படிப்பு பெண்களுக்கு தேவையா? என்ற தலைப்பில் சொற்போர் நடைபெற்றது. தோழியர்கள் கல்யாணி, ஜி. பி. அமுதா, திரு. கு. பெ. துரைசாமி ஆகியோர் தலைப்பினை ஒட்டியும், அதனை வெட்டித் தோழர்கள் மு. செ. சிவப்பிரகாசம், பால்ராசன், எ. குப்புசாமி, ஆர். டி. சுந்தரராசன், ம. செல்வராசன் ஆகியோரும் சொற்போர் நிகழ்த்தினர். தலைவரின் முடிவுரைக்குப் பின், திரு. கே. திருவேங்கடம் நன்றி நவிலக் கூட்டம் முடிவுற்றது.

சென்னை — புதுப்பேட்டை அண்ணா படிப்பகம்

7—7—56 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில், தோழர் கா. ரா. சம்மந்தம் தலைமையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்ற போது இவ்வாண்டு நிர்வாக உறுப்பினர் தேர்வு நடைபெற்றது. செயலாளர்: என். எஸ். எல். நாதன், துணைச்செயலாளர்: கே. [illegible]னம்; பொருளாளர்: [illegible] சந்திரோதய[illegible] 11 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை முத்தமிழ் மன்றம்

15—7—56 காலை 9 மணியளவில் முத்தமிழ் மன்றப் பணிமனையில், பொதுக் குழு உறுப்பினர் கூட்டம் தோழர் முத்தமிழ்மணி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, மன்ற வரவு-செலவு சரி பார்க்கப்பட்டது. பின்னர், புதிய நிர்வாகிகள் இவ்வாண்டிற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வாண்டிற்கென கௌரவத் தலைவராக பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்களும், துணைத் தலைவராக முத்தமிழ்மணியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

இம்மன்றத்தின் 12-வது சொற்போர் அரங்கு திரு. எஸ். இராசகோபாலன் தலைமையில் நடைபெற்றது. 'நம்பிக்கையைவிட, ஆராய்ச்சியே சிறந்தது' என்ற பொருள் பற்றிய சொற்போரில்

தாழ்த்தப்பட்டோர் மாநாடு செயற் குழு

5—7—56 பிற்பகல் 1 மணியளவில், செங்கற்பட்டு மாவட்டத் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டுச் செயற்குழு, திரு. கே. சின்னக் குழந்தை தலைமையில், காஞ்சிபுரம் மாநாடு காரியாலயத்தில் நடைபெற்றது. மாநாடு அமைப்பு முறைகளைப் பற்றியும், தீர்மானங்கள் குறித்தும் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டது. ஊர்வலம் வரதராஜ பெருமாள் கோவிலிலிருந்து புறப்பட்டு ஆடிசன்பேட்டை வழியாக மாநாட்டுப் பந்தலை அடைவது என்று முடிவு செய்யப்பட்டது.

கொழும்பு இலக்கியமன்றம்

11—7—56 மாலை, மன்றப் பணி மனையில், தோழர் ஏ. எஸ். மணவைத் தம்பி தலைமையில் கூடிய செயற்குழுக் கூட்டத்தில், இலங்கையில் 5—6—56ல் நடந்த தமிழர் அறப்போரில் கலந்து கொண்ட தோழர்களுக்கு—குறிப்பாக இ. தி. மு. க., தோழர்களுக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், இலங்கையில் நடத்தப்பட்ட உரிமைக் கிளர்ச்சிக்கு ஆதரவு கொடுக்குமுகமாகச் சென்னை கோகலே மண்டபத்தில் திரு. எச். டி. ராசா தலைமையில் நடத்தப்பட்ட சர்வ கட்சிக் கூட்டத்தைப் பாராட்டி நன்றியறிதலைத் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மேட்டுப்பாளையத்தில் காகித உற்பத்தித் தொழிற்சாலையும் உடுமலைப்பேட்டையில் சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலையும் ஏற்படுமென்று திட்டப் பிரச்சாரக் கூட்டமொன்றில், கலெக்டரின் உதவியாளர் கூறியுள்ளார்.

நவீன கால மனிதர்கள் புராதன காலச் சூழ்நிலையில் வாழ முடியுமா?

காரன்னுக் (பிரான்ஸ்) ஜூலை 16—நவீன கால மனிதர்கள் புராதன காலச் சூழ்நிலையில் வசித்தால், அது எவ்வாறு அவர்களைப் பாதிக்கக் கூடும் என்பதற்காக இங்கு ஒரு விசித்திரப் பரிசோதனை நடைபெற்றிருக்கிறது.

ஆட்டுத் தோல்களை சுமந்து செல்லும் 10 பிரெஞ்சுக்காரர்கள், டூலூஸ் வடக்கிலுள்ள மனித சஞ்சாரமற்ற பீடபூமியைச் சேர்ந்த குகையொன்றில் ஜூலை 1-ந் தேதி முதல் வசிக்க ஆரம்பித்தனர்; ஆனால் இருவர், இம்முயற்சியைப் பின்னால் கைவிட்டு விட்டனர்; மற்ற 8 பேர்களும் இரண்டு வார காலமாகத் தங்களுக்குக் கிடைத்த பாம்பு, நத்தை, வண்டு முதலிய வற்றைச் சாப்பிட்டுக்கொண்டு தங்கினர்; 15 வயதுள்ள ஒரு சிறுவன் தவிர, மற்றவர்களுக்கு தாடி-மீசை எல்லாம் நன்கு வளர்ந்து விட்டது.

இரண்டு வாரங்களுக்குப் பின்னர் குகையிலிருந்து இவர்கள் வெளிவந்த பின், பசியினால் அவதியுற்ற இக்குகை மனிதர்களுக்கு மீண்டும் நவீன ஆகாரங்களான 'சூப்', பழ வகைகள் அளிக்கப்பட்டன.

மருத்துவர்கள் பரிசோதனை செய்த பின், அவர்கள் மிகவும் பலவீனமாக இருப்பதாகக் கூறப்பட்டது. மூன்று நாட்களுக்கு அவர்கள் மது வகைகளை அருந்தக் கூடாதென்றும் தடை விதிக்கப்பட்டது.

விமான விபத்துகளின்போது நடுக்காடுகளிலும், மலைகளிலும் சிக்கி நவீன மனிதன் வசிக்க நேர்ந்தால் அவனுக்கு என்ன விளைவுகள் நேரிடும் என்பது குறித்து ஆராயவே இக்குகை மனிதர்களின் பரிசோதனை நடைபெற்றது.

பெயர் சூட்டல்

காரைக்குடி தோழர் சி. சிவனேச பாண்டியன் துணைவியார் தோழியர் அம்பிகாபதி அம்மையார் 25—5—56ல், ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; அம்மகவுக்கு 'அன்பழகன்' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 [illegible] கொடை தரப்பட்ட[illegible] பெற்றோம் — நன்[illegible] பொறுப்பாளர்.

மும்முனைப் போ[illegible] நினைவு நாள்

சென்[illegible]குயப்பேட்டை

1[illegible]—7—56 காலை 8 மணியளவில், சென்னை—குயப்பேட்டை (24-வது வட்டம்) இராமானுசத் தோட்டத் தெருவிலுள்ள திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையிலிருந்து, தோழர் க. வரதன் தலைமையில், சைக்கிள் ஊர்வலம் ஒன்று கழகக்கொடிகளையும், இலட்சிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளையும் ஏந்தி, வட்டத்தின் முக்கிய வீதிகள் வழியாக பவனிவந்தது. தொண்டர்களுக்கு திரு. தங்கவேலு அவர்கள் மலர் மாலைகள் அணிவித்து, குளிர் பானம் வழங்கினார். மற்றும் பல முக்கிய வீதிகளில் தொண்டர்களுக்கு கழக ஆதரவாளர்களால் குளிர்ந்த பானங்கள் வழங்கப்பட்டது. இறுதியில் ஊர்வலம் மன்றப் பணிமனை அடைந்ததும், தோழர் எம். கோவிந்தன் தலைமையில், 'ஜூலை-15' பற்றிப் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் புனுகு-நடராசன் இயக்கப் பாடல்கள் பாடினார்; தோழர் லோ. இளமாறன் நன்றி நவின்றார்.

பந்தநல்லூர் :

15—7—56 மாலை 5 மணிக்கு, தோழர் என். அசோகன் தலைமையில் கொடியேற்று விழா நடைபெற்றது. 'ஜூலை 15'—என்பது குறித்து தோழர் அசோகன் விளக்கமாகவும் உருக்கமாகவும் பேசினார். கூட்ட முடிவில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பெங்களூர் — அக்கிப்பேட்டை :

15—7—56 காலை, கழக பணிமனையில், திரு. ஜி. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எல். கெங்காதரன் (கன்னடம்), எஸ். வி. பதி, சி. உலகநாதன், ஏ. கனகசுந்தரம், வே. இளஞ்சேரன் ஆகியோர் தி. மு. கழகம நடத்திய மும்முனைப் போராட்டம் குறித்தும், அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு ஆளாகி, உயிர்நீத்தத் தோழர்களுக்கு வீர வணக்கம் செலுத்தியும் சொற்பொழிவாற்றினர்.

கிளைக் கழகத்தின் முயற்சியினால் புதிதாகத் துவக்கப்பட்ட 'வ. உ. சிதம்பரனார் நூல் நிலையத்'தை தோழர் வி. கே. நடேசன் திறந்துவைத்து, நூல் நிலையம் வளர வேண்டியதைப் பற்றியும், கழகத் தோழர்களின் கண்ணியம்—கட்டுப்பாடு—கடமை பற்றியும் பேசினார். தோழர் சி. உலகநாதன் நன்றி கூறினார்; செயலாளரால் இனிப்பு வழங்கப்பட்டது.

கழகச் செய்திகள்

சென்னை 11-வது வட்ட தி. மு. கழகம்

12—7—56 மாலை 6 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், கிளைக் கழகத் தோழர் கா. வி. ராதாகிருட்டிணன் தந்தை இயற்கையெய்தியமை குறித்து கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்தும், தோழர்கள் தெ. அன்பரசு, து. தமிழ்ச்செல்வன் ஆகியோர் முறையே பொருளாளராகவும் துணைச் செயலாளராகவும், தோழர்கள் கா. வி. இராதாகிருட்டிணன், எஸ். சுந்தரம் ஆகியோர் கிளைக் கழகப் பொதுக்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகம்

8—7—56 காலை கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் ப. ஆசைமுத்து (செயலாளர்), கே. கணபதி (துணைச் செயலாளர்) விலகல் கடிதங்கள் பரிசிலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது; பின்னர் தோழர் எம். ஆர் கண்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் வ. பா. சின்னையா, ஆர். என். பத்மநாபன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளராகவும், 5 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிங்களாந்தபுரத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

திருச்சி மாவட்டம் முசிறி தாலுகா, சிங்களாந்தபுரத்தில், 12—7—56 மாலை 7 மணிக்கு, தோழர் ஏ எஸ். ராசன் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மருதமுத்து, எம் எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மேலவரகுணராமபுரம் தி. மு. கழகம்

8—7—56 காலை $10\frac{1}{2}$ மணிக்கு கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்[illegible] கருப்பசாமி தலைமையில நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: பொ. முத்துமணி; துணைச்செயலாளர்: மு. தங்கசாமி; பொருளாளர்: பு. கருப்பசாமி; விளம்பர உறுப்பினர்கள்: ப. கடற்கனி, டி. கே. முத்து; மாவட்டப் பிரதிநிதி: மு. தங்கசாமி.

பேரையூர் தி. மு. கழகம்

15—7—56 காலை 11 மணிக்கு, தோழர் என். குப்புசாமி தலைமையில், செயலாளர் இல்லத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் விரைவில் படிப்பகம் ஒன்று திறப்பதென்றும், கழகச் சார்பில் 'நம் நாடு' இதழ்கள் வாங்கி விற்பனை செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நல்லூர் தி. மு. கழகம்

14—7—56 இரவு 9 மணிக்கு, தோழர் ஏ. கே. ஆறுமுகம் இல்லத்தில் தோழர் எம். எஸ். கந்தசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கப்பட்டன. பின்னர், இலங்கை பிரதமரின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தும், தமிழர்களைக் கொடுமைப்படுத்தும் அவரது போக்குக்குக் கண்டனம் தெரிவித்தும், திருச்சி மாநில மாநாட்டின் தீர்மானங்கள் அனைத்தையும் வரவேற்றும், தோழர் அழகிரியின் துணைவியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருப்புத்தூர் தி. மு. க. பொதுக்கூட்டம்

15—7—56ல், இராமநாதபுரம் மாவட்ட திருப்புத்தூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் அ. குருசாமி தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பெரி. அழகு, பி. திருஞானம், இளமாறன், பொன்னம்பலம் எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசியபின், தோழர் கண்ணதாசன், 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

கீழப்பட்டில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

கள்ளக்குறிச்சி வட்டம், கீழப்பட்டில், 13—7—56ல், தோழர் சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில், சமுதாயத்தில் உள்ள ஊழல்கள் பற்றியும், மாநில மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கியும், தி. மு. கழகம் தேர்தலில் நிற்பதின் அவசியம் பற்றியும், தோழர்கள் மு. பாண்டியன், சுந்தரம், இராமகிருட்டிணன் ஆகியோர் பேசினர். இறுதியில், வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

திருமணங்கள்

15—7—56 காலை 9 மணிக்கு, சென்னை—ஜூலைமேடு, திருவள்ளுவபுரம், கே. விநாயகம் 2-வது தெரு, எண் 97 இல்லத்தில், தோழர் டி. ஞானசேகரன் — தோழியர் எல்லம்மாள் திருமணம், தோழர் க. அப்பாதுரை தலைமையில் நடைபெற்றது.

தோழியர் அலமேலு-அப்பாதுரை, தோழர்கள் வ. சங்கரநாராயணன், பொ வில்லவன், கோ. இளவரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு 37-வது வட்ட தி. மு. கழக சார்பில் ஒரு புத்தகமும், மலர் மாலையும், மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றத்தின் சார்பில், ஒரு வெள்ளிக்குவளை, சரிகை மா[illegible]யும், மற்றும் பல நண்பர்களாலும், உறவினர்களாலும் ஏராளமான புத்தகங்களும் வாழ்த்து மடல்களும் கொடுக்கப்பட்டன. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

15—7—56 மாலை 6 மணிக்கு, சென்னை கிருட்டிணம்பேட்டை முருகப்ப முதலி தெரு, எண் 5 இல்லத்தில் தோழர் கா. எல்லப்பன்—தோழியர் சரோசா திருமணம், தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெற்றது. தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர் இரா. கோதண்டராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

13—7—56-ல், சிறுகளப்பூர் (திருச்சி) மணமகன் இல்லத்தில் தோழர்ச. முத்து—தோழியர் பொன்னுரங்கம் திருமணம் தோழர் எஸ். ஆர். முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆதிமூலம், சி. கு. பிச்சை, பி. என். கோவிந்தசாமி, வடிவேல், அரங்கராசன், சண்பகராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறுகளப்பூர் தி. மு. கழகச் சார்பிலும், தனிப்பட்டோர் சார்பிலும் மணமக்களுக்குப் பல வாழ்த்துமடல்கள் வாசித்தளிக்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடை கொடுக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

'காமன்வெல்த்' சாதித்தது என்ன?

இந்தியாவிற்கு ஏன் அந்த உறவு?

தமிழர் என்ற பாச உணர்வு கூட அற்றவரா காமராசர்?

நேருவும்-காமராசரும் வில்லனாகவும்—பபூனாகவும் நடிப்பதேன்?

மும்முனைப்போர் நினைவு நாள் கூட்டத்தில்

கருணாநிதி கேள்விக் கணைகள்

"இலங்கையை சொர்க்க பூமியாக்கி, அங்கே மாட மாளிகைகளை எழுப்பி, காடுகளைத் திருத்தி, தேயிலை விளையும் தோட்டங்களாக்கிய தமிழர்கள் இன்று அல்லல்படுகிறார்கள்.

"ஆயிரம் ஆண்டுக் காலமாய் அங்கேயே வாழ்ந்துவரும் தமிழர்கள் இன்று உரிமை இழந்து தேம்பியழுகிறார்கள்.

"உரிமை கோரிய தமிழரில் 25 பேர் பிணமாக்கப்பட்டிருக்கின்றனர்.

"நேரு என்ன செய்துகொண்டிருக்கிறார்? 'பிரிட்டிஷ் இராணியுடன் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்,' என்று செய்தி கிடைக்கிறது.

"நேரு வாய் திறந்து ஒரு கண்டனக் குரல் எழுப்பினாரா? ஏன் எழுப்பவில்லை?

"நேரு தான் எழுப்பவில்லை; அவர் வாய் திறப்பதற்கு செத்துப்போனவர்கள் குஜராத்திகள் அல்லவே! மார்வாரிகள் அல்லவே! தமிழர்கள்தானே செத்தார்கள்? தமிழர்களுக்காக அவர் ஏன் வாய் திறக்கப் போகிறார்?

"காமராசர் ஏன் வாய் திறந்து பேசியிருக்கக் கூடாது? தமிழர்கள் என்ற பாச உணர்ச்சிகூடவா அற்றுப்போனவர், காமராசர்?

"இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதியை—கொடுமையைக் கண்டித்து நாம் சுவரொட்டி ஒன்று அச்சடித்திருந்தோம்; அந்த 'படுகொலை' சுவரொட்டிகளைக் கண்டுவிட்டு, 'இது என்ன, நாடக விளம்பரமோ என்று பார்த்தேன்'—என்று பேசியிருக்கிறார், மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி!

"நாடகம்தானே ஆடிக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள்! பண்டித நேரு 'வில்லனாக' இருக்கிறார்; கிருஷ்ணமாச்சாரி 'காமெடியனாக' இருக்கிறார்; காமராசர், அந்த நாடகத்தின் 'பபூனாக' இருக்கிறார். ஷேக்ஸ்பியர் எழுதிய 'டிராஜடி'களைப்போல, எல்லாம் 'டிராஜடி'யாகவே நடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

"25 பேர் பிணமான செய்தி கேலிக்குரியதாக—கிண்டலுக்கு உரியதாக ஆகிவிட்டிருக்கிறது, அவர்களுக்கு!

"இலங்கையில் 25 தமிழர்களைப் பிணமாக்கிவிட்டு, இரத்தக்கறை படிந்த நிலையில், பண்டாரநாயகா இலண்டன் சென்றார்; அவரோடு, இந்தியாவிலிருந்து சென்ற பிரதமர் நேரு கை குலுக்கிக்கொள்கிறார்—காமன் வெல்த் பிரதமர்கள் மாநாட்டில்! இது எப்படி இருக்கிறது பாருங்கள்.

"காமன் வெல்த் என்ற அமைப்பில் இந்தியா ஏன் இருக்கவேண்டும்? 1947-ல் பூரண சுயாட்சி கிடைத்துவிட்டது என்றார்களே! அதற்குப்பின், ஏன் காமன் வெல்த்தில் அங்கம் வகிக்கவேண்டும்?

"இந்தியாவை, தனது அடிமைச் சின்னமாக மட்டுமா வெள்ளையன் வைத்திருந்தான்? 'ஆளவேண்டும்' என்ற ஆசைக்காக மட்டுமல்ல அவன் இந்தியாவை அடிமை கொண்டிருந்தது; இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டுவதற்காக—இந்தியாவை மார்க்கெட்டாக—சந்தையாக வைத்திருப்பதற்காகவும் தான், இந்தியாவை அடிமை கொண்டான்.

"அன்றையதினத்தைவிட இன்று, எந்தவகையில் வெள்ளையனுக்கு 'மார்க்கெட்'டாக இருக்கும் நிலையிலிருந்து இந்தியா மாறிவிட்டிருக்கிறது? அன்றுவிட இன்று, அழகான முறையில்—வசதியான முறையில்—இந்தியா சந்தையாகிவிட்டிருக்கிறது. வெள்ளையரின் ஆட்சி வெளியேறிவிட்டது; அவ்வளவே தவிர, வேறொன்றுமல்ல!

"காமன்வெல்த்தில்—ஸ்டர்லிங் பிரதேசத்தில் இந்தியா இருப்பதினால் என்ன பலன் என்றால், 1946-ம் ஆண்டில், இந்தியாவிற்குள் பிரிட்டனிலிருந்து ரூ. 5 கோடி பெறுமான சாமான்கள் இறக்குமதியாகிக் கொண்டிருந்தன; 1949-ம் ஆண்டில் ரூ. 25 கோடி பெறுமான சாமான்கள் இறக்குமதியாகியுள்ளன; இதுதான், சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் இந்தியா, காமன்வெல்த்தில் அங்கம் வகிப்பதினால் பெறக்கூடிய பலனா?

"காமன்வெல்த்தில் இருப்பதினால், இந்தியா மேலும் பிரிட்டனுக்கு வியாபாரச் சந்தையாக ஆக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். மலிவான நிலையில், வேறு இடங்களிலிருந்து சாமான்கள் வாங்கமுடியும் என்றாலும், காமன்வெல்த்திலிருப்பதினால், கிராக்கியான விலை தந்தேனும் பிரிட்டனில் சாமான்கள் வாங்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறோம்—கட்டாயப்படுத்தப்படுகிறோம்—கட்டுப்படுத்தப்படுகிறோம்; இதற்காகத்தான் இந்தியா, காமன்வெல்த்தில் அங்கம் வகிக்க வேண்டுமா?

"காமன்வெல்த் இதுவரை சாதித்தது என்ன? அந்தக் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் ஒன்பது நாடுகளும் 'நவக்கிரக' நிலையில் ஒன்றுக்கு ஒன்று உடன்பாடான கருத்து ஏதுமின்றி இருப்பதைக் காண்கிறோம்.

"காஷ்மீர் தகராறு இன்னும் தீர்ந்தபாடில்லை; ஆனால் பாகிஸ்தான் பிரதமரும், இந்தியப் பிரதமரும் கைகுலுக்கிக் கொள்கிறார்கள், அங்கே! அவர்களால், காஷ்மீர் பிரச்சினைக்கு முடிவு காண இயலவில்லை!

"இலங்கையில், 25 பேர்களைப் பிணமாக்கிவிட்டு வந்திருக்கும் பிரதமர் பண்டாரநாயகாவுடனும், இந்தியப் பிரதமர் கைகுலுக்குகிறார்; விருந்து உண்ணுகிறார்; ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு முடிவு ஏதும் காணவில்லை—காண முயற்சிக்கவில்லை, அவர்கள்!

"ஆஸ்திரேலியாவில் 35 இலட்சம் சதுரமைல் நிலப்பரப்பில், 80 இலட்சம் மக்கள்தான் வசிக்கின்றனர்; 40 இலட்சம் சதுரமைல் பரப்புள்ள கனடாவில், 1 கோடி மக்கள்தான் வசிக்கின்றனர்; ஆனால் ஒரு கோடி சதுரமைல் பரப்புள்ள இந்தியாவில் 35 கோடி மக்கள் வாழ்கின்றனர்.

"ஜனநெருக்கமுள்ள இந்தியாவிலிருந்து, நெருக்கம் குறைவான ஆஸ்திரேலியா, கனடா நாடுகளில் இந்தியர்கள் குடியேறுவதை அந்த இரு நாடுகளும் தடை செய்கின்றன; 'குடியேற விடமாட்டோம்' என்று பேசுகின்றன; அந்த இரு நாடுகளும் காமன்வெல்த்தில் இருக்கத்தான் செய்கின்றன அதில் இந்தியா அங்கம் வகிப்பதினால்தான் என்ன பலன்?

"தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்குத் தரப்படும் மதிப்பு என்ன? எல்லோரும் அறிந்ததுதான்; அந்த தென்னாப்பிரிக்காவும் காமன்வெல்த்தில் உறுப்பினர்; இந்தியா அதில் இருப்பதினால் என்ன பலன்?

"தேசீய விடுதலைபற்றிப் பிரமாதமாகப் பேசுகிறார், பண்டிதர். ஆனால் பிரிட்டன், சிங்கப்பூர், சைப்ரஸ் போன்ற நாடுகளுக்கு சுதந்திரம வழங்க மறுக்கிறது; 'அங்கெல்லாம் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தை மதிக்கமாட்டேன்' என்கிறது. அதுதான் போகட்டும்; கோவா விடுதலைபற்றி கர்ஜிக்கிறார் நேரு; அந்தக் கோவாவை விட மறுக்கும் போர்ச்சுகல் பிரதமர் சலாசருடன் கூடிக்குலாவுகிறது பிரிட்டன்! வெட்கம் இருக்க வேண்டாமா, இந்தியப் பிரதமருக்கு?

"இங்கேயுள்ள சுப்பிரமணியம் போன்றவர்கள், 'நேரு எவ்வளவு பெரிய தலைவர்; அவரைப் பற்றி, தி. மு. கழகத்தவா எப்படிப் பேசலாம்?'—என்றெல்லாம் பேசுகின்றனர்.

"ரஷ்ய நாட்டுத் தலைவர்கள் புல்கானினோடும், குருஷேவுடனும் நேரு கை குலுக்குகிறார்—அறிவோம்! அமெரிக்காவின் அழைப்பைக் கையிலேந்தி நிற்கிறார்—பார்க்கிறோம்! நேரு வளர்கிறார்—தெரிகிறது! ஆனால், நாடு தாழ்கிறது—வளரவில்லை!

"நேரு ஒரு அங்குலம் வளர்ந்தால், நாடு ஒரு அடி தாழ்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது!

"நேரு வளர்ந்திருக்கிறார்—உயர்ந்திருக்கிறார்—என்கிறார்கள்; இருக்கலாம். நேருவின வளர்ச்சி, வடவருக்குப் பயன்படலாம; ஆனால் நமக்கு?

"தென்னாட்டைப் பொறுத்து, நமது வரிப் பணம் எல்லாம் பாழாக்கப்படுகிறது—நமது செல்வம், வடநாடு வளரவே பயன்படுத்தப்படுகிறது—என்ற நிலை இருக்கிறதே!

"நேரு உயரமானவர்தான்; ஆனால், பக்ரா-நங்கல் அணைக்கட்டு அவரைவிட உயரமானதாக எங்கள் கண்ணுக்குப் புலப்படுகிறது.

"போன்ற அணைக்கட்டுகள், நாம் தருகிற பூரத்தம், சிந்துகிற வியர்வை இவற்றைக்கொண்டு, வடநாட்டில உருவாக்கப்படுகின்றன. [illegible] தான், 'நேருவுக்கும் நமக்கும் உறவு என்ன?' என்று நாம் [illegible]ம்; 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்று [illegible]கமிடுகிறோம். நமது விடுதலை முழக்கத்தை, இந்த மும்மு[illegible]ாட்ட நினைவு நாளில், மேலும் உரத்தோடு எழுப்புகிறோம்,"

என்று, தோழர் மு. கருணாநிதி அவர்கள், சென்னை[illegible] 15—7—56 அன்று நடைபெற்ற மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவரது சொற்பொழிவின் முதற் பகுதி நேற்றைய இதழில் தந்திருந்தோம்; பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.

மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக்கூட்டம்

★

சென்னை—தியாகராயநகர்:
(சி. ஐ. டி. நகர்—ஓய். எம். சி. ஏ. அருகில்)
19—7—56 மாலை 6-மணிக்கு

தலைவர்:
மா. திருநாவுக்கரசு

பேசுவோர்:
மு. கருணாநிதி
இளம்பரிதி

புதுவை வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம்

★

"29-7-56 காலை 9-மணிக்கு, தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள் தலைமையிலும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையிலும், புதுவை வட்டத்திலுள்ள தி.மு.கழக உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறும். சில முக்கிய விஷயங்களின் ஆய்வுக்குப் பின், 'உறுப்பினர் கடமை' என்னும் பொருள்பற்றிப் பொதுச்செயலாளர் அவர்கள் பேசுவார்.

"எல்லாக் கிளைகளின் உறுப்பினர்களும், அவசியம் கலந்து கொள்ள வேண்டுகிறேன்; இடம் முதலிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். அன்று மாலை பொதுக்கூட்டமும் உண்டு,"

என்று, புதுவை தி. மு. க. வட்டக் குழு செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

சென்னை [illegible]7-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

20—7—56 இரவு 9-மணிக்கு, சென்னை, அனுமந்தராயன் கோயில் தெரு, எண் 32 இல்லத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு—செலவு, சொற்பயிற்சிக் கூட்டம், தேவையான செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

சென்னை—சூளை, ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக மனையில், 51-வது சொற்பயிற்சிக் கூட்டம் 19—7—56 மாலை 7-மணியளவில், தோழர் கு. [illegible]ணன் தலைமையில் நடைபெறு[illegible] [illegible]கை திருத்திய உத்தமர்கள்' என[illegible]பல, படிப்பகத் தோழர்கள் பேசுவர்.

ஆண்டுதோறும் ரூ. 13,50,000

சென்னை சர்க்கார் கொடுக்க வேண்டுமென சிபாரிசு

புதுடில்லி, ஜூலை 16—
திரு-கொச்சியிலிருந்து சென்னை மாநிலத்திற்கு மாற்றப்படவிருக்கும் ஐந்து தமிழ் தாலுகாக்களிலுள்ள கோயில்களின் பராமரிப்புச் செலவுகளுக்காக சென்னை சர்க்காரின் பொத்த நிதியிலிருந்து, சென்னை மாநிலத்தில் ஏற்படவிருக்கும் ஒரு தேவஸ்வம் நிதிக்கு ஆண்டுதோறும் ரூ. $13\frac{1}{2}$ இலட்சம கொடுக்கவேண்டுமென்று, மாநிலச் சீரமைப்பு சம்பந்தமான அரசியல சட்டத் திருத்த மசோதா கூறுகிறது; அம்மசோதாவின் ஒரு அசல பிரிவு விரிவாக்கப்பட்டு, மக்கள் சபையின் கூட்டு தனிக் குழுவால் இது சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் உணவுப் பற்றாக்குறை

டில்லி மந்திரி தரும் விளக்கம்

பொதுவாக, இந்தியாவின் உணவு நிலை என்ன? டில்லி உணவு மந்திரி விளக்கம் தருகிறார், பாருங்கள்!

"உணவு விஷயத்தில் இந்தியா தன்னிறைவு பெற்றிருக்கிறதா இல்லையா என்று கூறுவது கடினமான ஒன்றாகும்.

"ஒரு ஆண்டில், தன்னிறைவு பெற்றிருக்கலாம்; மறு ஆண்டில், பெறாதிருக்கலாம்.

"இந்தியாவில், அதிகரித்துவரும் மக்கள் தொகை, காலநிலை மாறுபாடுகள், முதலியன உணவுத் தேவையை அதிகரிப்பனவாகும்.

"தொழிலாளர்கள், குறைந்த வருமானமுடைய நடுத்தர மக்கள் ஆகியவர்களின் வருமானத்தில் 70 சத விகிதம் உணவுக்காகவே செலவிடப்படுகிறது. அவர்களுக்குக் கொஞ்சம் அதிகப் பணம் கிடைத்தால், அவர்கள் உணவுப் பொருள்தான் அதிகம் வாங்குவார்கள்."

—இவைதான் உணவுநிலை குறித்த மந்திரியின் விளக்கம்!

உணவு விலை ஏற்றத்தைத் தடுக்க இரண்டுவகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.